








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 17.10.2018


We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, “AK” Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்













## தமிழக நிகழ்வுகள்

- பாசன நீர் வசதி இல்லாத இடங்களில் பாசன நீர் ஆதாரங்களை உருவாக்கி, விவசாயிகள் நுண் நீர் பாசன முறையில் **(Micro Irrigation)** சாகுபடி மேற்கொள்வதற்கு **2018 – 2019 ஆம்** ஆண்டில் **பிரதம மந்திரியின் விவசாய நீர் பாசனத் திட்டத்தில் "ஒரு துளி நீரில் அதிக பயிர்"(Pradhan Mantri Krishi Sinchayee Yojana – Per Drop More Crop)** என்னும் மத்திய – மாநில அரசு திட்டத்தின் கீழ் தமிழக அரசுக்கு முதற்கட்டமாக ரூ.45 கோடியே 71 லட்சம் நிதியினை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிட் (BPCL – Bharat Petroleum Cooperation Ltd) ஆனது தனது இரண்டாம் தலைமுறை (2G) **எத்தனால் உயிரி சுத்திகரிப்பு** ஆலையை ஒடிஷாவின் பார்கர் மாவட்டத்தின் புவல்சின்ஹா கிராமத்தில் 2020ல் செயல்நிலைப்படுத்த முடிவு செய்துள்ளது.
  - நாட்டில் இதுவே நெல் வைக்கோலிலிருந்து எத்தனாலை தயாரிக்கும் முதல் உயிரி எரிபொருள் ஆலையாகும்
- **குறிப்பு:**
  - தேசிய உயிரி எரிபொருள் கொள்கை (National Bio-fuel Policy) – 2018-ன் படி இந்தியாவானது 2030க்குள் 20 சதவீதம் எத்தினாலை பெட்ரோலுடன் கலப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் சர்வதேச திரைப்பட திருவிழா ஆனது நவம்பர் 20 முதல் நவம்பர் 28 வரை நடைபெறவிருக்கிறது. இந்த ஆண்டு **ஜார்க்கண்ட் பங்குதாரர் (Partner)** மாநிலமாக செயல்படுகிறது.
  - இத்திருவிழாவில், ஜார்கண்ட் மாநில கலாச்சாரத்தை வெளிப்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது

- ஹரியானாவின் குருகிராமில் சர்வதேச மொத்த சந்தை தொழிற்சங்கத்தின் **(WUWM) – World Union of Wholesale Markets)** 32-வது சர்வதேச கருத்தரங்கு தொடங்கப்பட்டது
  - சர்வதேச மொத்த சந்தை தொழிற்சங்க (WUWM) கருத்தரங்கு முதன்முறையாக இந்தியாவில் நடைபெற்றது


We Shine Academy TM

- ○ இக்கருத்தரங்கின் கருத்துரு (Theme): **"டிஜிட்டல் சகாப்தத்தில் மொத்த சந்தைகள்: சவால்கள் மற்றும் வாய்ப்புகள்". (The Wholesale Markets in the Digital Era: Challengers and Opportunities)**

## உலக நிகழ்வுகள்

- போர்ச்சுக்கல்லின் வடக்கு மற்றும் மத்தியப் பிரதேசம் பகுதிகளை **'லெஸ்லி புயல்'** கடுமையாக தாக்கியது. சுமார் 3 லட்சம் பேர் மின்சாரம் இல்லாமல் தவித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

- வங்கதேசத்தின் 47 ஆண்டுகால வரலாற்றின் முதன் முறையாக மேஜர் ஜெனரலாக **டாக்டர் "சுஸானி கிடி (Susani Giti)"** என்ற பெண் அதிகாரியை வங்கதேசம் நியமித்துள்ளது
  - ○ இவரே வங்கதேச இராணுவத்தின் முதல் பெண் மேஜர் ஜெனரல் ஆவார். இவர் 1986ல் வங்கதேச இராணுவப் படையில் மருத்துவப் பிரிவின் தலைவியாக சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

We Shine Academy™

## விருதுகள்

- புகழ்பெற்ற தாள இசைக் கலைஞரான விக்கு விநாயக மூர்த்திக்கு தி மியூசிக் அகாடமியால் சிறப்பு வாழ்நாள் சாதனையாளர் **(Special Lifetime Achievement)** விருது வழங்கப்பட்டுள்ளது. தி மியூசிக் அகாடமியிலிருந்து சிறப்பு வாழ்நாள் சாதனையாளர் விருது பெறும் 3-வது இசைக்கலைஞர் **திரு.விநாயகராம்** ஆவார். இதற்கு முன் இவ்விருது பெற்றவர்கள்: **கமலா லட்சுமிநாராயணன் (2002), லால்குடி ஜெயராமன் (2008)**

## முக்கிய தினங்கள்

- **உலக உணவு நாள் (World Food Day) – அக்டோபர் 16**
  - ○ உலக உணவு நாள், ஆண்டுதோறும் அக்டோபர் 20 ஆம் நாளன்று உலக நாடுகளில் கொண்டாடப்படுகிறது. **1945 ஆம்**

**ஆண்டு அக்டோபர் 16-ம்** நாளில் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆரம்பிக்கப்பட்டதை நினைவு கூறுவதற்காக ஐ.நா இந்நாளை சிறப்பு நாளாக அறிவித்தது

  - **உலகில் பசியால் வாடுவோர்களின் எண்ணிக்கையை குறைத்து அவர்களுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்து கிடைக்கச் செய்வதே இந்நாளின் நோக்கம்.**

- சர்வதேச கிராமப்புற பெண்கள் தினம் **(International Day of Rural women)- அக்டோபர் 15**
  - கிராமப்புற பெண்கள் கிராம வளர்ச்சிக்கும், உணவுப் பாதுகாப்பிற்கும் வறுமையை ஒழிப்பதற்காகவும் மற்றும் நோய்வாய்ப்பட்ட முதியவர்கள் மற்றும் குழந்தைகளையும் பாதுகாப்பதற்காக பாடுபடுவதை உலகறியச் செய்வதற்காக ஆண்டுதோறும் அக்டோபர் 15ஆம் தேதி சர்வதேச கிராமப்புற பெண்கள் தினம் கொண்டாடப்படுகிறது
  - இத்தினமானது **அக்டோபர் 15, 2008** முதல் ஐ.நா சபையால் கொண்டாடப்படுகிறது
  - இந்த ஆண்டிற்கான கருத்துரு **(Theme): "Sustainable Infrastructure, Services and Social Protection for gender equality and the Empowerment of Rural woman and Girls"**

We Shine Academy™